Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்துசாதனம்

[விரோதி ஞ (1889) ஆனி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] யாழ்ப்பாணம்:- சார்வரி ஷு தைமீ கசஉ வெள்ளிக்கிழமை 27 January 1961 [இல-சங]

# ஞானப்பிரகாசர் பிறந்த இந்நாட்டிலுமா இக்கொடுமை?

## மாட்டு இறைச்சிக் கடை இங்கு வேண்டாம்

### பசுவதை மகாபாதகம் — அதைத் தடுப்பவர்களுக்குக் கோடி புண்ணியம்

### பரந்தனில் நடந்த பகிரங்க எதிர்ப்புக் கூட்டத்தில் வெளியிடப்பட்ட கருத்து

"பறங்கித் தளபதி ஒருவனுக்கு உணவாகும்பொருட்டு ஒரு பசுவைக் கொடுப்பதைக் காட்டிலும், யாழ்ப்பாணத்தையே விட்டு ஓடுவது மேல் என்று துணிந்து ஞானப்பிரகாசர் அன்று எமது நாட்டை விட்டு சிதம்பரஞ் சென்று அங்கு திருக்குளம் அமைத்து ஆனினம் பேணி, காவி தரித்து இறைவன் அடி சேர்ந்தார்".

"இத்த உத்தமர் வாழ்ந்த யாழ்ப்பாணத்து மக்கள் இன்று 99% சைவமக்கள் வதியும் கரைச்சிப்பகுதியில் இரண்டு மாட்டு இறைச்சிக் கடைகளை அமைக்க, கரைச்சிக் கிராமச் சங்கம் அநுமதி கொடுத்துக் கடைகட்டப்பட்டு வருவது கண்டும் சைவமக்கள் சகித்திருப்பது விசனிக்க வேண்டியது. சில பாவிகள் இத்தகைய கடைகளை அமைத்து அப்பகுதி மக்களையும் பாவிகளாக்க விடுதல் கூடாது எதிர்ப்புக் கூட்டங்கள் பரந்தன், கிளிநொச்சிப் பிரிவுகளில் வைத்து பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கினால் திறக்கப்பட்ட கடைகளையும் மூடக்கிராமச் சங்கம் சட்டம் ஏற்படுத்தும்" இவ்வாறு பரந்தன் கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில், பரந்தன் சைவப் பாடசாலை மண்டபத்தில் இளைப்பாறிய ஆசிரியர் திரு V. மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற எதிர்ப்புக் கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றிய திரு இ. த. சுப்பிரமணியமவர்கள் கூறினார்கள்.

கிளிநொச்சி, பரந்தன் குடியேற்றவாசிகள் இக்கூட்டத்தில் மிகவும் அக்கறையுடன் கலந்துகொண்டனர்.

புலாலுண்ணாமையே சிறந்த அறமாகும். புலாலை மறுத்தவரை எல்லாவுயிரும் கைகூப்பித் தொழும். அப்படியிருக்க பிறந்தநாள் முதல் மனிதன் இறக்கும் நாள் வரை உபயோகித்து வரும் பாலைக் கொடுக்கும் பசுக்களையே கொலை செய்யும் கொலைக்கூடங்களை தருமபுரம், உருத்திரபுரம், உமையாள்புரம், கனகபுரம் யோகபுரம், கணேசபுரம், குமாரபுரம், கேவிபுரம் ஆதிய கிராமங்களின் தலைநகராக மிளிரும் கிளிநொச்சியிலும் அதனை அடுத்த பரந்தன் சந்தையிலும் அமைப்பது தலையாய ஈஸ்வரத் துரோகமாகும்.

ஆனினம் பேணி, குளம் அமைத்து, புல்தரை தயாரித்து, ஆ உரோஞ்சு கல் நிறுவி வாழ்ந்தனர் எம் முன்னோர். இன்று இறைச்சிக் கடைகளையும் கொலைக் கூடங்களையும் அமைப்பது ஸ்தல தாபனங்களுக்கே அவமானம் என்று திரு. சுப்பிரமணியமவர்கள் தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டார்கள்.

திரு. S. இராசா அவர்கள் பாலின் பலனையும், தயிரின் தன்மையையும், நெய்யின் விசேடத்தையும் எடுத்துக் காட்டி, பசுவைக் கொல்லுதல் சமூகத்தை அழித்தலாகும் என்று நிரூபித்தார்.

கிராம முன்னேற்றச் சபைச் செயலாளர் திரு. செ நடராசா (ஆசிரியர்) நெற் செய்கைக்கு கால்நடைகளின் அவசியத்தை வற்புறுத்திக்கூறி அமெரிக்கா, உருசியா இன்று பசுக்காத்து வாழ்ந்து எமது குழந்தைகளுக்கும் இலவச பாலுணவு கொடுப்பதைப் புகழ்ந்தார்.

திரு. S. சுபபிரமணியம் J. P. அவர்களுடன், பரந்தன் சைவவித்தியா விருத்திச் சபையின் பழைய அதிபர் திரு. N. K நல்லதம்பி, திரு. M. சின்னத்தம்பி ஆகியோர் இக்கூட்டத்தில் தீவிர பங்கெடுத்துச் சொற்பொழிவுகளாற்றினர்.

## நற்சிந்தனை

கோச்சை மக்களைக்
கூடு மூடர்கள்
அச்சத் தால்மனம்
அலைவர் திண்ணமே.

தனக்குத் தானிக
ரான சங்கரன்
துணைபப தத்தினைத்
துதிக்க இன்பமே.

(சிவ தொண்டன்)

## யாழ்ப்பாணப் பிரதேசக் கலாமன்ற நூல் அரங்கேற்ற விழா

யாழ்ப்பாணப்பிரதேசக் கலாமன்றம் வெளியிட்ட "வாய்மொழி இலக்கியம்" என்னும் நூல் அரங்கேற்றம் மன்றத் தலைவர் திரு ம ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் 31-1-61 செவ்வாய்க்கிழமை மாலை 4-45 மணிக்கு ஆரம்பமாகி நிகழவிருக்கின்றது.

பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை, திரு. மு. இராமலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். செல்வி பரமேஸ்வரி பரம எம். ஏ, செல்வி பத்மா சோமகாந்தன், இசைப் புலவர் திரு சி. செல்லத்துரை, திரு மு. சின்னையா ஆகியோரின் நாட்டுப்பாடல் இசை விருந்தோடும் நடைபெறும்.

## சட்டவிரோதச் செயல் எம் நாட்டிற் பெருகுவதேன்?

### சாட்சிசொல்ல எம்மவர் பின்நிற்பது காரணமாகுமா?

### சமயாசாரவாழ்க்கை பரவினால் இவை நிகழ்தலும் ஆகுமா?

நீதிமன்றங்களுக்குப் போய்ச் சாட்சி சொல்வதற்கு எங்கள் நாட்டு மக்கள் பின்நிற்பதோ, மறியற்சாலைகளில் மறியற்காரர் உல்லாச வாழ்க்கை வாழ்வதோ யாழ்ப்பாணத்திற் சட்ட விரோதச் செயல்கள் பெருகுதற்குக் காரணம்?

களவுகள், கொள்ளைகள் பரவுவதைத் தடுத்தற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு மானிப்பாய் சனசமூக நிலைய ஆதரவில் நடந்த கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசும்போது இராசவாசல் முதலியார் திரு. சி. தியாகராசா அவர்கள் மேற்கண்டவாறு வினவினார்கள்.

யாழ்ப்பாண மக்கள் சமாதானப் பிரியர் என்ற புகழுரைக்குரிய எங்கள் மத்தியில சட்ட விரோதச் செயல்கள் பெருகுவதைப் பார்த்து வருந்துகின்றேன். சட்ட விரோதமான செயல்களை அனுவதித்துச் செய்யும் முறை பழைய காலத்திலிருந்ததில்லை. அவ்வித செயல்களை எதிர்க்க மக்கள் வலியுள்ளவர்களாயிருந்தார்கள். சமயாசாரங்களைப் பேணாமையே இக்கால நிலைமைக்குப் பிரதான காரணமாகும்.

சட்டவிரோதச் செயல்களைக் கண்டுபிடிக்க உதவுதற்கு அரசாங்க விதிகளுக்கமைந்து நடக்கும் உத்தியோகத்தரல்லாத தலைமைக்காரரை அரசாங்கம் நியமிக்க வேண்டும். தலைமைக்காரரும் 'பொலிசாரும் அவதானிக்கும் பொருட்டு சந்தேகமானவர்களின் பெயர்களைக் கிரமப்படுத்திக் கொடுக்கும் பொருட்டு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்று தியாகராசா அவர்கள் தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டார்கள்.

பட்டினசங்கத்தலைவர் திரு. எஸ். முத்துக்குமாரசாமி, காரியாதிகாரி திரு. டி. டபிள்யு. செல்வரத்தினம், வைத்திய கலாநிதி எச். பி செல்லையா, திருவாளர்கள்: எஸ் கதிர்காமத்தம்பி, வி. சி. சண்முகம், கே. கார்த்திகேசு, ரி. கந்தையா ஆகியோரும் பேசினர்.

சட்ட விரோதச் செயல்கள் தடுக்கப்படுமென்று காரியாதிகாரி உறுதிமொழி கூறினார். 'பொலீஸ்" உதவி அதிகாரி ஸ்ரீ. எஸ். வீரசூரிய பேசும்போது சட்டம் உதவியாயிருப்பதால் அஞ்சவேண்டாமென்று கூறி சட்ட விரோதச் செயல்களை உடனே தங்களுக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்,

திரு. எஸ், முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமையில "மாட்டிறைச்சிக் கடைகள் திறக்கக்கொடுத்த அநுமதிகளை உடனே நீக்கவேண்டு"மென்னும் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

## கோவில் கட்ட அரசாங்கஉத்தரவுவேண்டும்

எதிர் காலத்திற் கோயில்கள் கட்டுவோர் அரசாங்க உத்தரவைப் பெறவேண்டிய கட்டுப்பாட்டைச் செய்யும் சட்டமொன்றை அமைக்க அரசாங்கம் ஒழுங்கு செய்கின்றது.

கலாசார அமைச்சரின் உத்தரவின்றிக் கோயில் கட்டுதல், கட்டிடங்களைக் கோயிலாக மாற்றுதல் ஆகியவற்றைத் தடுப்பதோடு பொது இடங்களிற் கோயில்கள் கட்டுவதைக் கட்டுப்படுத்தல், நட்டஈடு கொடுத்துக் கோயில்களை அகற்றுதல் ஆகியவற்றுக்கு வேண்டிய அதிகாரம் குறித்த சட்டத்தால் அமைச்சருக்குக் கொடுக்கப்படுகின்றது.

குறித்த ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் குறைந்தது 250 பேர் கையொப்பமிட்டே கோயில்கட்ட விண்ணப்பிக்க வேண்டும். அவர்கள் கோயில் கட்டுமிடத்திலிருந்து அரை மைல் தூரத்திற்குள் வசிப்பவர்களாயிருத்தல்வேண்டும். இருக்கும் கோயில்களிலிருந்து புதிய கோயில் அரைமையிலுக்கப்பாலமைய வேண்டும். புதைபொருளாராய்ச்சி முதலிய அரசாங்க அலுவல்களுக்குரிய நிலங்களில் இவை இடம் பெறலாகாது என்பனவும் குறித்த சட்டத்தால் உண்டாகும் கட்டுப்பாடுகளாகும்.

---

சட்டவிரோதச் செயல்களைத் தடுத்தற்குத் தொண்டர் படை ஒன்று இருத்தி அமைக்கப்பட்டது. சட்டவிரோதச் செயல் செய்வோரைக் கருதப்படுவோரின் பெயர்களை எழுதி உதவுதற்கு ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

செவ்வாய்க்கிழமை தைமீ 18௨ (31-1-61) தைப்பூசத் திருநாளின் பொருட்டு, சைவப்பிரகாச யந்திரசாலையும், இந்துசாதனக் காரியாலயமும் மூடப்பட்டிருக்குமென்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்,

—அதிபர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சார்வரி ௵ தை மீ
௧௫௨ வெள்ளிக்கிழமை


## ஒத்துழையாமையே ஒரே ஒரு வழி

ஒதுக்கப்படும் தமிழ் இனத்தின் உரிமைகளைப்பெறுவதற்குப் பாராளுமன்றத்திலிருந்து ஒன்றும் செய்ய முடியாது என்று சமஷ்டிக்கட்சியின் ஏழாவது மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் முடிபு எல்லா அரசியற்கட்சிகளுக்கும் இப்பொழுதாவது உண்மையான நிலைமையைப் புலப்படுத்தும் என்று நம்புகின்றோம். இந்த உண்மை தனிச் சிங்களக் கொள்கை தலை எடுத்த காலந் தொடக்கம் பல அரசியல் அறிஞர்களால் எடுத்துக் காட்டப் பெற்றது. ஆனாற் கட்சிகள் அதை உணராது பாராளுமன்றம் புகும் முயற்சியிற் பன்னாள் உழைத்துப் பொழுதை அவமே கழித்துவிட்டனர். ஒத்துழையாமையே ஒரே ஒரு வழி என்ற உண்மை புலனாயிருப்பதைக் கண்டு நாம் ஆறுதல் அடைகின்றோம்.

இந்நாடு தமிழ்பேசும் இனத்துக்கும் உரியதென்ற உண்மையைப் பாராளுமன்றத்தில் உறுதிப்படுத்த முடியாத வகையில் ஒத்துழையாமை இயக்கமே உரிமையைப் பெற உதவக் கூடியதென்பது தெளிவாகின்றது. இந்த இயக்கத்தை எந்தக் கட்சி நடத்தினாலும் அதனால் விளையும் பயன் தமிழ இனத்தைச் சாரும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடப்போகின்றோம் என்று மட்டும் கூறுவது போதாது. பாராளுமன்றத்தில் இருப்பதிற் பயனில்லை என்ற உண்மை உதயமான அந்தக்கணமே தமிழ்பேசும் இனத்தைச்சேர்ந்த உறுப்பினர்கள் அத்தனைபேரும் விலகிவிடுதல் முதல் நிகழ்ச்சியாயமைதல் வேண்டும். இயக்கத்தை இயக்கும் தலைவர்கள் அறுபது நாழிகைப் பொழுதும் ஒவ்வொரு நாளும் தேச சேவை செய்தல்வேண்டும். பொருளாதாரப் பொறுப்பை நோக்கிக் கட்டுப்பாடாக வாழ்ந்து காட்டுதல் வேண்டும், வீண் விரயத்துக் குரியவைகளை அடியோடு விட்டுவிடுதல் வேண்டும். வெளிநாட்டுச் சுருட்டு மதுபானம், மேனாட்டு உடை நடை என்ற வகையிற்பொன்னைச் சேமித்து, நூல்நூற்றல், ஆடை நெய்தல், உள்ளூர்ச் சருக்கரை உண்டாக்குதல் (பனையின் கற்பக வளத்தைப் பயன்படுத்தல்) என்ற இவ்வாறுரும் பலவற்றில் ஈடுபடுதற்கு இளைஞர்களை ஏவக்கூடிய தொழில்முறைகளை நிறுவுங்கடமை மிக முக்கியமானது.

மக்கள் மனத்தில் உணர்ச்சி உதயமாவதற்கு வழிகாட்டிகளாக அமர்ந்திருக்கின்றவர்கள் முன்மாதிரியாக சத்திய ஒத்துழையாமையின் மகத்துவத்தை நடைமுறையிற் காட்டுவதே தகுந்த நெறி. நெருக்கடி வர வர பெருக்கமடைகின்றது. அரைக் கணமும் தயங்கமுடியாது. இன்றே செய்யவும் வேண்டும்; இன்னே செய்யவும் வேண்டும் என்ற அறிவுரையை ஒத்துழையாமை இயக்கமே வழியென உறுதிகொண்டிருக்கும் தலைவர்களுக்கு ஞாபகமூட்டுகின்றோம்.

x x x

### ஆன் இனத்தின் ஆபத்து

—0—

சைவ நாட்டில் அதுவும் நாவலர் வழிகாட்டிய நாட்டில் ஆன் இனத்துக்கு ஆபத்தென்றால் அம்ம! இஃதென்ன பழி!!

புனித உணவன்றி மனிதன் பிறவற்றை உண்ண ஒண்ணுதென்று எடுத்துரைகளும் மகிமைவாய்ந்த சைவ சமய மக்கள் பொருந்தா உணவை உட்கொள்வதும், அவ்வழி மாபாதகத்தைச் செய்வதும் செய்விப்பதுமானால் இந்நாடு ஈடேற முடியுமா?

இந்த இதழிற் பிறிதோரிடத்திற் பரந்தன் கூட்டவரலாற்றில் கோக்கொலையின் கோர நிகழ்ச்சிகளை எடுத்துக்கண்ணீர் வடித்து இவற்றைத் தடுப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யுங்கள் என்று சைவத் தலைவர்களுக்கும் சங்கங்களுக்கும் பணிவாய் விண்ணப்பம் விடுக்கப்பட்டிருப்பதைக் காண்க.

ஆன் இனத்தைக் காக்க முடியாதவகையில் ஊன் பெருக்கும் நோக்கம் சைவ நாட்டில் வேரூன்றுமேயானால் இங்கு குடிவாழ்வதிலும் பார்க்க அடவி காட்டில் இருப்பது நன்று. சைவப்பணியாற்றும் தொண்டர்களாவது இந்த தெய்வ நிந்தனையைத் தடுக்க முன்வரமாட்டார்களா?

அரசியல் அலை

# திறை சேரி வறுமைப்பட்டால்- வரி ஏற்றமா வழி?

## தமிழ் உபயோகப்பற்றி உபயோகமற்ற சமாவிப்பு?

—0—

### ஆளும் கட்சியினர் கையாளும் சூழ்ச்சி

**அரச நிதிக்குப் பணம் தேடும்வகையில் இறக்குமதி வரிகள் பல ஏற்றப்பட்டிருக்கின்றன. பத்திரிகைகளுக்கு உபயோகமாகும் காகிதத்துக்கு நூற்றுக்கு ஐந்துவிகிதத்திலிருந்து ஐம்பதுவீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது!**

வரி உயர்த்தும் கைதான் பாராளுமன்றத்து உறுப்பினர்களுக்கும் படி உயர்த்தவும் ஓங்கி நிற்கின்றது சிக்கனவுக்கு வழி காட்டும் சிறிமாவோ ஆட்சியிற் சிக்கின மக்கள் கதியைப்பற்றிப் பேசவும் வேண்டுமா?

தனிச் சிங்களத்தை சட்டபூர்வமாக்கிவிட்டு இடையிடையே தமிழ் உபயோகத்துக்கு வழி வகுக்கின்றோம்' என்று சாற்றினால் தமிழ் பேசும் இனம் சமாதானப்பட்டுவிடும் என்ற எண்ணம் சிறீமாவோ அரசாங்கத்திடம் இருக்கின்றது,

ஆளுங்கட்சிப் பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் கூடிச் சில சமரச ஒழுங்குகள் செய்யப்போகின்றார்கள் என்று செய்திகள் நிலைமையை அமைதியாக்கப் பார்க்கின்றன.

தமிழ் உபயோகச்சட்டம் உயிரற்ற உடல்போல ஒன்றுக்கும் ஒவ்வாத நிலையிலிருக்கின்றது. அதற்கு உயிரளிக்க உபயோக விதிகளை உண்டுபண்ணிப் பாராளுமன்றத்தில் விவாதிக்க ஆட்சியாளர் கையாளும் சூழச்சி மிக நன்றாயிருக்கின்றது.

தமிழ் இனத்தின் நிலைமை இப்பொழுது எவ்வாறிருக்கின்றதென்பதைப்பற்றிச் சிங்களத்தலைவர்கள் அறியவில்லைப்போலும்; அறிந்தால் நெருப்புடன் விளையாடும் நெறியைக் கையாள மாட்டார்கள். ஏமாற்றக் கதைகளைச் சொல்லி ஒரு இனத்தை ஆறுதல் செய்ய எத்தனிக்கும் தலைவர்களுக்கு அரசியல் அறிவே இல்லையென்று கூறலாம்.

—0—

# சமய பாடத் தேர்தல்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் ஆண்டு தோறும் நடத்தப்படும் சமயபாடப் பரீட்சை வருகிற 'ஏப்றில்' மாத நடுப் பகுதியில் நடத்தப்படும்.

தேவாரம், உபந்நியாசம், புராணபடனம் ஆகிய மூன்றும் தேர்தலுக்குரிய பாடங்களாகும். தேர்தல் மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவு, ஆரம்பபிரிவு, என்ற பாகுபாடுகளையுடையது. ஒவ்வொரு பிரிவுக்கும் மூன்று பரிசில்கள் ஷ சபையாதரவில் 'ஏப்றில்' மாதத்தில் நடைபெறும் அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் சித்திபெறும் பிள்ளைகளுக்கு வழங்கப்படும். பெண் பிள்ளைகளுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும் வெவ்வேறு பரீட்சைகள் வைத்துப் பரிசில்கள் வழங்கப்படும்.

தேர்தல்களிற் பங்குபற்ற விரும்பும் பிள்ளைகள் தங்கள் பெயரையும் வயதையும் குறித்துத் தலைமையாசிரியருடைய கைச்சாத்துடன் நுழைவுப் பத்திரங்களை 8-4-61க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்புவார்களாக.

சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம், 24-1-61,

மு. மயில்வாகனம், சமயப்பிரசார அமைச்சர்,

## பாட அட்டவணை

### 1. தேவாரம்

**1. ஆரம்ப பிரிவு: 10 வயதுக்குட்பட்டவர்கள்**

1 தேவாரம்: i. "பிடியதனுருவுமை" இராகம்: நாட்டை, தாளம்: ஆதி.
ii. "பித்தாபிறைசூடி" இரா. நாதநாமக்கிரியை. தாளம்: ரூபகம்.
2 புராணம்: "உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்" இராகம்: தோடி.

**2. கீழ்ப்பிரிவு 13 வயதுக்குட்பட்டவர்கள்**

1 தேவாரம்: i. 'உண்ணாமுலை' இரா. நாட்டை. தாள. ரூபகம்
ii. 'சலம்பூவொடு தூபம்' இராகம்: நவரோஸ். தாளம்: ஆதி.
2 திருவாசகம்: "மெய்தான் அரும்" இராகம்: மோகனம்.
3 புராணம்: "ஆதியாய் நடுவுமாகி' இராகம்: காம்போதி.
4 திருப்புகழ்: "இசைந்த ஏறும்" இராகம். செஞ்சுருட்டி, தாளம்: ஆதி,

**3. மத்திய பிரிவு: 16 வயதுக்குட்பட்டவர்கள்**

1 தேவாரம்: i. 'விருத்த குன்றம்' இராகம்: பந்துவராளி தாளம்: திஸ்ரசாதி திரிபுடை.
ii. சொற்றுணை வேதியன்' இராகம். கேதாரகௌளம். தாளம். திரிபுடை.
2 திருவாசகம்: 'உடையாளுன்றன்' இராகம் மோகனம்,
3 திருவிசைப்பா: 'பவளமால்வரையை' இராகம்: சக்கரவாகம்
4 திருப்பல். : 'பாலுகந்துப்பாலகன்' இரா. ஆனந்தபைரவி,
5 திருவிருத்தம்: 'குனித்த புருவமும்' இராகம். பைரவி.
6 திருப்புராணம்: 'வான்முகில் வழாதுபெய்க' இராகம். மத்தியமாவதி.
7 திருப்புகழ்: 'ஏறுமயில் ஏறிவிளையாடும்' இராகம்: மோகனம். தாளம்: கண்டசாப்பு

**4. மேற்பிரிவு: 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்**

1, தேவாரம் i 'நிரைகழல் அரவம்' இரா, பூபாளம், தா, ஆதி.
ii 'காணவினியது நீறு' இரா, நவரோஸ், தா. ரூபகம்
iii 'நகதாபடை, இரா. நாட்டை, தா. ரூபகம்.
2. திருத்தாண்டகம்: 'நாம் ஆர்க்குங் குடியல்லேம்' இரா, அரிகாம்போதி,
3. திருவாசகம்: 'இன்றெனக்கருளி' இரா மோகனம்.
4. திருவிசைப்பா: 'ஒளிவளர் விளக்கே' இரா சக்கரவாகம்.
5. திருப்பல்லாண்டு: 'மிண்டுமனத்தவர் போமின்கள்' இரா. ஆனந்தபைரவி
6. திருப்புராணம்: 'ஐந்துபேரறிவும்' இரா. சங்கராபரணம்.
7. திருப்புகழ்: 'அபசார நிந்தை' இரா. சக்கரவாகம். தா. கண்டசாதிதிரிபுடை.

### 2, உபந்நியாசம்

**1. ஆரம்ப பிரிவு: 10 வயதுக்குட்பட்டவர்கள். நேரம்: 5 நிமிஷம்**

1. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்
2. மெய்கண்டதேவர்
3. விபூதி.
4. ஆலய வழிபாடு.
5. தந்தைதாய் பேண். இவற்றுளொன்று.

**2. கீழ்ப்பிரிவு: 13 வயதுக்குட்பட்டவர்கள் நேரம்: 6 நிமிஷம்**

1. திருநாவுக்கரசு சுவாமிகள்
2. அருணந்தி சிவாசாரியார்
3. உருத்திராக்கம்
4. கடவுள் வழிபாடு
5. மகேஸ்வர பூசை இவற்றுளொன்று.

**3. மத்திய பிரிவு: 16 வயதுக்குட்பட்டவர்கள் நேரம்: 8 நிமிஷம்**

1. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
2. உமாபதி சிவாசாரியார்
3. ஸ்ரீ. பஞ்சாக்கரம்
4. நித்திய கருமம்
5. சிவனடியார் பெருமை இவற்றுளொன்று.

**4. மேற்பிரிவு: 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் நேரம்: 10 நிமிஷம்**

1. மாணிக்கவாசக சுவாமிகள்
2. சிவஞான சுவாமிகள்
3. சிவதீட்சை
4. உற்சவங்கள்
5. சைவாசாரம் இவற்றுளொன்று.

### 3. புராணபடனம்

மாணவர் எவரும் பங்குபற்றலாம். ஒவ்வொருவரும் பயன் சொல்லவும், இசையுடன் படிக்கவும் தெரிந்திருத்தல் வேண்டும்.

கந்தபுராணம் – காசிபனுபதேசப்படலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவச்சிறுவர்களின் சீர்கெட்ட நிலைமை

### யாழ்ப்பாணத்தில் சித்த வைத்தியம்

ஆயுள் வேத வைத்தியப் பகுதியிலுள்ள சித்த வைத்தியப் பிரிவு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்படலாமென்றும் இத்தொடர்பில் ஆலோசனைகள் நடைபெறுகின்றனவென்றும் அறியவருகின்றது.

உ
சிவமயம்

### கண்ணப்பநாயனுர் குருபூசை

நாள்: சார்வரி ஞு தை மீ கடு உ (28—1—61) சனிக்கிழமை.

இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:

இரவு: 6–30 — 7
கடவுளாராதனை,
தமிழ்மறையோதல்.

ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக் குருக்கள் அவர்கள்.

7 — 8 உபந்நியாசம்
"கண்ணப்பநாயனுர்"

சைவப்புலவர்
திரு வ சுப்பிரமணியம்

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்.
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம் 23-1-61.

## கதிர்காமம் இந்துதர்மசேவா சங்கம் செய்யும் பெருந்தொண்டு

நாற்பதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பார்ப்போர்க்குப் பெருந் துன்பத்தை யுண்டாக்கும் நிலைமையில் கதிர்காமத்தில் வசிக்கின்றனர். அவர்களுக்கு நல்வாழ்க்கை வசதி செய்தற்கு கதிர்காமப் இந்துதர்மசேவாசங்கத்தினர் தகுந்த முயற்சி செய்கின்றனர். முக்கியமாக முன்னை நாள் நீதிபதி ஸ்ரீ ஸ்பென்ஸர் இராசரத்தினம் அவர்களும் இராமக்கிருஷ்ண மடத்து ஸ்ரீமத் சுவாமி சர்வாதீரானந்தஜீ அவர்களும் பிள்ளைகளின் பிற்கால நலன்களை மிகவும் கருத்திற்கொண்டுள்ளனர்.

மேற்படி சங்க நிர்வாக சபைக்கூட்டம் 15-1-60 ஞாயிற்றுக்கிழமை கூடியது போஷகர் ஸ்ரீ ஸ்பென்ஸர் இராசரத்தினம் அவர்களும் சமுகமளித்தார்கள். கூட்டத்தில் சங்கத்துக்குப் பணம் திரட்டுதல் பற்றியும் அத்தியாவசிய செலவுகளுக்குக் கையாளவேண்டிய முறைகளைப்பற்றியும், ஞாயிறு சைவசமயப் பாடசாலையைப் பற்றியும் தீர்மானங்கள் நிறைவேறின.

ஞாயிறு பாடசாலைச்சிறுர்க்குச் சைவசமய போதனை கல்வியில் ஆக்கமும் ஊக்கமு மறிதற்குச் செய்ய வேண்டியவைபற்றிச் சபையோர் நீண்ட நேரம் ஆராய்ந்தனர். பள்ளிப்படிப்பிலும் ஊக்கம் கொடுப்பதற்குச் சைவசமயப் பாடசாலைகளுக்கு கிரமமாக வருபவர்களுக்கும் சமயப் படிப்பில் கவனம் காட்டும் பிள்ளைகட்கும் தற்போது சங்கச்சார்பால் புத்தகம் கற்பலகை ஏனைய உபகரணங்களை உபகரிக்குப்படி சுவாமி சர்வாதிதானந்தா ஆசிரியர் ச கந்தையா அவர்கள் கூறியதை சபை அங்கீகரித்தது. வெள்ளிக்கிழமை தோறும் கோவில்களில் மாலை நேரப 'பஜனை' செய்யும்பொழுதும் ஞாயிற்றுக்கிழமைப் பாடசாலைக்கு வரவும் மற்றும் விசேஷ தருணங்களில பிள்ளைகட்கு கௌரவமான சுத்த உடை அணிவதற்கு இரண்டுசோடி உடுப்பு வழங்கவும் தீர்மானித்தனர் பிள்ளைகளைப் பிச்சை எடுக்க ஏவிப் படிக்க வைப்பதில் அசிரத்தையுடைய பெற்றோர்களை உணரவைக்குமுகமாக அவர்கள் பிள்ளைகளுக்கு ஒரு சலுகையும் ஆரம்பத்தில் கொடுக்காமல் விட்டு நிலைமையை அவதானிக்கவும் சபையோர் எண்ணினர்.

ஞாயிறு சைவசமயப் பாடசாலைக்குப் பணமும் பொருளும் உதவிய அன்பர்கள் பெயர்கள் சபையோர்க்கு அறிவிக்கப்பட்டன.

சபையில் பண இருப்புக் குறைவாக (ரூபா 450-)இருப்பதால் செலவுக்கு வேண்டிய பணத்தைப் பாவிக்க அதிகாரம் இருப்பினும் அன்பர்கள் அநுதாபிகளிடம் எமது தேவைகளைப் பெற முயற்சிக்க வேண்டுமென உபகாரியதரிசி கூறினர்.

சமய போதனைக்குரிய புத்தகங்களை திரு. ஸ்பென்ஸர் இராசரத்தினம் உபகரிப்பதாகச் சொன்னதும் சபையோர் அகமகிழ்ந்தனர்,

### இந்த மாசம் முடியமுன் சாத்வீக எதிர்ப்பு இயக்கம்

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க அலுவலகங்களில சிங்களம் தனி ஆட்சி மொழியாய் உபயோகிக்கப் படுவதையும் இம் மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில சிங்களம் போதிக்கப்படுவதையும் எதிர்க்கும சாத்வீக இயக்கமொன்று நடத்தப்படுமென்றும், அது இந்தமாத முடிவுக்குள்ளேயே ஆரம்பிக்கப்படலா மென்றும தமிழரசுக்கட்சி மகாநாட்டில் தீர்மானஞ் செய்துள்ளனர்.

### சென்னையில் "தமிழ்நாடு" இயக்கம்

சென்னை இராச்சியம் தமிழ்நாடு என்றழைக்கப்பட வேண்டுமென்னும் இயக்கமொன்றை நடத்த தமிழரசுக் கழகம் தீர்மானித்துள்ளது. இத்தொடர்பில் சென்னை முதல் மந்திரி [illegible] அடி [illegible] மறுமொழி [illegible]

## அட்டகிரிக் கலம்பகம்

[ நவாலியூர் ஸ்ரீ க. சோமசுந்தரப் புலவர் அவர்கள் பாடியது ]

நூல்
மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா
ஈரடித்தரவு

பணிகொண்ட நிலவுலகு மகல்விசும்பும் பணிந்தேத்தும்
அணிகொண்ட மணிகண்டத் தைம்முகவ னறுமுகனும்
மின்னையேய் துடியிடையாள் வெற்பரசி யிருந்திடவுந்
தன்னையே தாயாகித் தந்தையுமாய்த் தான்கலந்து
மாருகக மலர்தூவி வந்தமத வேளுடலம்
நீருக்கச் சிமிட்டியருள் நெற்றிநடு நெடுவிழியில்
மாலாகி வருந்தாமல் மண்ணிடந்து சுவையமல்
காலாறு பொருந்தாமல் கவியாமற் கருவாகிக்
கூறுமறை நெறிவாழக் குலவுமுயி ரருள்வாழ
வாறுபொறித் திருக்குழவி யறுமுகமும் பொறையுயிர்க்க
ஐவர்தம்மு ளங்கொருவ னங்கையமர்த் தங்கமலத்
தெய்வசர வணவாவி சேர்ந்தறுவர் பாலருந்திப்
பல்லுலகும் பலவுயிரும் பரிந்தருளும் பச்சைகிறச்
செல்விபுகுந் தெடுத்கணைக்கத் திருவுருவ மொன்ருகிக்
கருங்கடலு நெடுங்கிரியுங் காரவுண குலகலகப்
பெருங்கடலு மழித்தமரர் பெரியசிறை விடுத்தருளிக்
கற்பியலுங் களவியலுங் காட்டிகடி மணங்காட்டிப்
பொற்பியலு மட்டகிரிப் புனுத்தனிவிற் பொலிந்தோய்கேள்,

ஈரடித்தாழிசை.

தாயாகித் தந்தையுமாய்த் தனியான சங்கரற்குச்
சேயாகி வந்ததன்றித் தேசிகனு மாயினையே;
அஞ்சரணந் தஞ்சமெனு மமரர்சிறை மீட்கவந்து
கஞ்சமலர்க் கடவுளைக் கடுஞ்சிறையி விட்டனையே
திருமறையின் முதற்பொருளுந் தீந்தமிழின் முழுப்பொரு
ஒருமுனிவ னிருசெவியு முளமுமுற வுரைத்தனையே [ளும்
ஆருளுஞ் செய்யசடை யரனேயென் றழுதவற்கு
வேளுகா நிலைதெரிக்க மேவியருள் புரிந்தனையே
வஞ்சமுடன் கொல்லவரும் வல்லவுணன் மனம்மாற்றிச்
செஞ்சரணிற் றிருக்கொடியிற் றிருக்கொடியச் சேர்த்தனையே
பொன்மாமி பூமாமி புழுங்கவொரு பொறிமானை
நன்மாமி முறைகூற நலவிதனை நயந்தனையே.

(தொடரும்.)

### யாழ். மாநகரசபை மொழி

வருகிற மாசம் 9-ந் திகதி தொடக்கம் மாநகரசபை அலுவல்கள் எல்லாம் தமிழ் மொழியிலேயே செய்யப்பட வேண்டுமென்று யாழ்ப்பாண மாநகரசபை முடிவு செய்துள்ளது.

## இந்தியாவில் மகாராணியார்

### மட்டற்ற மகிழ்ச்சி பொங்கும் மக்கள் வரவேற்பு

மகாராணியார் தமது ஆசிய சுற்றுப்பிரயாணத்தை எடின்பரோ கோமகனுடன் மேற்கொண்டு இங்கிலாந்திலிருந்து புறப்படலாயினர். இந்தியா, பாக்கிஸ்தான், நேபாளம், பேர்சியா ஆகிய நாடுகள் குறித்தசுற்றுப்பிரயாணத்தில் இடம் பெறுகின்றன.

முதற்கண் இந்தியாவில் இறங்கிப் பார்வையிட்ட பின் பாக்கிஸ்தான் சென்று, மீண்டும் இந்தியாவுக்குச் சென்று பார்வையிட்டு அங்கிருந்து ஏனைய நாடுகளுக்குச் செல்லுதல் ஒழுங்காயுள்ளது.

இந்த ஒழுங்கின்படி சென்ற சனிக்கிழமை தெல்லி மாநகரை வந்தடைந்தார் மகாராணியார். இந்தியசனுதிபதி ஸ்ரீ இராசேந்திரபிரசாத், உபசனுதிபதி கலாநிதி எஸ். இராதாகிருஷ்ணன், முதல் மந்திரி பண்டிதநேரு முதலிய பலர் விமானநிலையத்தில் வரவேற்றனர்.

இங்கே இன்று வந்தமையால் நான் குதூகலமடைகின்றேன். பிரித்தானிய மக்களின் அன்பையும் நல்லெண்ணத்தையும் நான் இந்திய மக்களுக்கு என்னுடன் கொண்டு வந்திருக்கின்றேன். பிரித்தானியாவுக்கும் இந்தியாவுக்குமிடையிலுள்ள நட்பையும் நன்மதிப்பையும் இந்தியாவுக்கும் பிரித்தானியாவுக்கும் எல்லாச் சாம்ராச்சிய நாடுகளுக்கு மிடையிலுள்ள நட்பையும் நல்லெண்ணத்தையும் எங்கள் வருகை உலகுக்கு எடுத்துக்காட்டுமென்று நம்புகின்றேன்.

விமான நிலையத்திலளிக்கப்பட்ட வரவேற்பின்போது

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

யமைமையால் குறித்த இயக்கத்தை இந்த மாசம் 5-ம் திகதி ஆரம்பிப்பதென தமிழரசுக்கழகத்தலைவர் திரு. ம. பொ. சிவஞானமவர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

தொழில் நுட்பக் கலாசாலை
(SCHOOL OF TECHNOLOGY)
"சிற்ருடெல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

எங்கள் நாட்டின் பொருளாதார விருத்திக்கும், கல்விகற்றும் தொழிலின்றித் தவிக்கும் இளைஞர்களுக்கு வழிகாட்டவும், தமக்கும் தம் தாய் நாட்டுக்கும் பயனுள்ள வகையில் அவர்களைப் பயிற்றவும் இக்கலாசாலை பணி செய்கின்றது தமிழ்ச் சமுதாயத்தை எதிர் நோக்கி நிற்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டின் இளைஞர்களின் நோக்குப் புதிய திசையில் திரும்பவேண்டும்,

தொழில் நுட்பக் கலையே எதிர்காலத்தில் ஈடேற்றம் தரவல்லது

1. மின்சார சாதனை அமைப்பு வேலை
2. தன்னியக்கிகளின் பொறியியல் கல்வி
3. வானெலிக் கருவிகளைப் பேணும் முறைகள்
4. மின்சார பொறியியலில் சாதனைப் பயிற்சி
5. பொறியியல் சம்பந்தமான வரைதல்
6. அளத்தல் படம்போடுதல் மட்டமாக்குதல் முதலிய உலாந்தாக்கல்வி
7. கட்டட அமைப்பு, திட்டப்படங்கள் வரைதல் முதலியன,

இன்னேரன்ன கலைப்பயிற்சி இக்கலாசாலையில் பெறலாம். பயிற்சித்திட்டங்களை விளக்கும் சூசனப்பிரதிகள், கலாசாலையிற் சேரவேண்டிய விண்ணப்பப்பத்திரங்கள், கலாசாலைக் காரியாலயத்திற் பெற்றுக்கொள்ளலாம்,

கலாசாலை அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த பலத்தைத் திருப்பக் கொடுக்கிறது!

# பலவிருத்திக் குளிகை

இது ஆச்சரியமான குணம் உடையது

அசதி, பலவீனம், உடல்மெலிவு, நரம்புததளர்ச்சி, மறதி தாது பலவீனம் முதலியவைகளை நீக்கி புதிய இரதத்தை நரம்புகளுக்குள் புகுததி இழந்துபோன பலததையும் வலிமையையும் மீட்டிக் கொடுத்து வாழ்ககையை வளம்பெறச் செய்விக்கிறது. 120 குளிகை புட்டி 1 க்கு ரூ. 12-00,

## மூல வியாதிக்கு

நாக பஸ்பம், கருணை லேகியம் சாப்பிடுங்கள்

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரைந்துவிடும்.

சீழ் மூலம், இரத்தமூலம், மலபந்தம், குத்தல் கடுப்பு முதலிய 9-வித மூல வியாதிகளும் குணமாகிறது.

பஸ்பமும், லேகியமும் 24 நாள் செட் விலை ரூ. 20-00

**மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S.I.**


# தமிழரசுக்கட்சி

## செய்ய முற்பட்டுள்ள தொண்டுகள்

—0—

யாழ்ப்பாணத்தில் நடந்த அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 7-வது தேசியமகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளின் பொருள் பின்வருமாறு:—

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களம 'அமுல்' நடத்தப்படும் அரசாங்க காரியாலயங்களின் முன் சட்ட மறுப்பு இயக்கம நடததுவதுடன், சிங்கள 'அமுலுக்கு உடந்தையாக இருககும் உததியோகததர்களுடன ஒத்துழையாமை நடததுவது. சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்படும் பாடசாலைகளில் சிங்களம போதிக்கப்படுவதை எதர்ப்பது மேற்கண்ட நேரடி நடவடிக்கைகளில் இம் மாதம் 30-ந் தேதிக்குப் பிந்தாமல் இறங்குவதோடு, சந்தர்ப்பங்களை அனுசரிதது இயக்கததை விரிவுபடுத்துதல்.

2 மலைநாட்டுத் தமிழர் பிரச்சினையை இலங்கை இந்தயப் பிரச்னை எனக்கருதாது இலங்கையிலுள்ள தமிழருககும சிங்கள மக்களுக்குமிடையிலுள்ள ஓர் பிரச்சினையெனக கருதுவதோடு, தற்போதைய பிரசாவுரிமைச் சட்டத்தை விட்டு, உலக மனித உரிமை சாசனத்தை அனுசரித்த சட்டங்களை இயற்றி மலைநாட்டுத தமிழருக்கு பிரசாவுரிமை வழங்குமபடி இலங்கை அரசாஙகததைக் கேட்டுக்கொள்வது.

3. தமிழ்ப்பிரதேசங்களின் பொருளாதாரததை வளமபடுததும் வழிவகைகளை ஆராயுமுகமாக ஒரு குழுவை நியமிப்பதோடு, சிங்களப்பகுதிகளில் முடஙகியிருக்கும் தமிழ் மூலதனங்களைத் தமிழ்ப் பிரதேசங்களுக்குக் கொண்டு வருமபடியும சேமிப்பு வங்கிகளில் போட்டுள்ள பணத்தைத் திருப்பி எடுத்துக கொள்ளும்படியும் தமிழ மக்களைக் கேட்டுககொள்வது.

4 சட்டத்தின் உதவியின்றி மனமாற்றத்தால் தீண்டாமையை ஒழிககுமுகமாக ஏப்ரல்'' 30-ந் தேதிக்கு முன் தமிழ்ப்பகுதிகளிலுள்ள சைவக்கோவில்கள் போசன சாலைகள் முதலானவற்றை ஹரிசன மக்களுக்குத் திறந்துவிடுமாறு பொதுமக்களைக கேட்டுக்கொள்வது.

5, சிங்களம மட்டும் உத்தியோக மொழியாக 'அமுல்' நடத்தப்படுவதற்கு எதிர்ப்புத தெரிவிககும வகையில் தமிழர் ஒவ்வொருவரும் தமது சகல அலுவல்களையும தமிழிலேயே செய்யவேண்டுமென்று கேட்பது.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா **616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுதது ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றததக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை

மனேஜர்

Std 14


## திருவிடைமருதூரில் திருமுறைப் பாராயண நிறைவு விழா

### திருவாவடுதுறை ஆதீன ஆதரவிற் சிறந்த ஒழுங்குகள்

சிதம்பரம். ஜனவரி. 19

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளின் அருளாணையின்படி திருவிடைமருதூரில் ஆதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானத்தில் 100 நாள் வரை 3-வது ஆண்டு "பன்னிரு திருமுறைப் பாராயணம்" முறையாக நடைபெற்று வந்து நேற்று மாலை சமயப்பிரசார மண்டபத்தில் நிறைவு விழா நடைபெற்றது. இராச்சிய அறநிலைய ஆணையாளர் ஸ்ரீ. ஏ உத்தண்டராமபிள்ளை ஐ. ஏ. எஸ். அவர்கள் விழாவினை ஆரம்பித்து வைதது திருமுறைகளின் பெருமைகளை விளக்கிப் பேசினர்.

ஆதீன வித்துவான் "சித்தாந்த சைவமணி" ஸ்ரீ. த. ச. மீனுட்சிசுந்தரம்பிள்ளை 1,2,3; அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் ஆராய்ச்சித்துறை முதல்வர் ஸ்ரீ ஜி சுப்பிரமணியம்பிள்ளை 4,5,6, மகாவித்துவான் ஸ்ரீ ச. தண்டபாணிதேசிகர் 7, ஸ்ரீ மகாலிங்கதேசிகர் 8, 9, ஆதீன வித்துவான் ஸ்ரீ வீரசிவம் 10 வித்துவான் ஸ்ரீ பொன், சுப்பிரமணியம்பிள்ளை 11, 12 திருமுறைகளைக் குறித்துப் பேசினர்கள.

**திருப்புகழ் கல்வெட்டு திறப்பு விழா**

ஸ்ரீ, அருணகிரிநாதர் இத்தலததில் பாடிய திருப்புகழ் பாடல்களைச் சலவைக்கல்லில் பொறித்து ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதை ஆணையாளர் ஸ்ரீ. ஏ, உத்தண்டராமன திறந்து வைத்தார்.

**நூல் வெளியீடுகள்**

விழாவின் நினைவாக ஸ்தல திருப்புகழ், சித்தாந்த ஞான போதம், அற்புதத்திருவந்தாதி உரையுடன் ஆகிய 3 நூல்கள் அச்சிட்டு வெளியீடு செய்யப்பட்டன.

இரவு திருமுறை இன்னிசைவாணர்களின் பாராயணததுடன் திருமுறைகள் வீதியுலாக்காட்சி நடைபெற்றது

**அறுபத்துமூவர் உறசவங்கள் வீதியுலா**

இன்று (19-1-61) இரவு 38 விமானங்களில் அறுபத்துமூவர் உறசவங்கள் வீதியுலாக் காட்சியும சிறந்த முறையில் நடைபெறறது,

திரு. மா. பா. தினமணிநிருபர்)

## தமிழரசுக்கட்சி உத்தியோக மாற்றங்கள்

—0—

தமிழரசுக்கட்சித் தலைவராய் பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ் எம் இராசமாணிக்கமவர்களும், காரியதரிசியாய் வழககறிஞர் திரு. வி, நவரத்தினமவர்களும தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்

ஏனையோர் தெரிவு பின்வருமாறு:- உபதலைவர்கள் திருவாளர்கள் வைததிய கலாநிதி இ. எம். வி. நாகநாதன், என், ஆர். இராசவரோதயம், வி ஏ. அழகக்கோன், வைத்திய கலாநிதி எஸ். ஏ தர்மலிங்கம், எஸ். பூபாலரத்தினம். உதவிக் காரியதரிசிகள்: திருவாளர்கள் எஸ். சின்னத்துரை, எஸ் கதிரவேற்பிள்ளை; எஸ். சுப்பிரமணியம். தனதிகாரி: திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம். பதவுகாரர் திரு. எஸ். நடராசா. நிருவாக சபையிலும் தேவையான மாறறஙகள் செய்யப்பட்டுள்ளன.

## சிங்களத்தில் வழக்கு

### ஏற்கமுடியாதென நிராகரிக்கப்பட்டது

கொழும்பில நீதிபதி திரு. வி. சிவசுப்பிரமணியமவர்கள முன்னிலையில் சிங்களமொழியில் சமர்ப்பிக்கப்பட்ட "சிவில்" வழக்கொன்று நீதிபதியால் நிராகரிக்கப்பட்டது. "சிவில்" நடைமுறைச் சட்டத்தின்படி ஆங்கிலத்திலேயே வழக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நீதிபதி கூறினார். [illegible]


கடவுளை வணங்கு

கருணையைப் பெறுவாய்


## கோட்டு விற்பனவு விளம்பரம்

உசன் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாககள் கரம்பகம் 1. தாமோதரம்பிள்ளை செல்வரத்தினம், 2, கந்தையா வீரசித்தம்பி, 3. சந்திரசேகரி இராசரததினம், 4. உசன் கந்தையா சுவாமிநாதர். —வழககாளிள.

எதிராக

இல. 1929

மிருசுவில், பெஞ்யமின் யேமஸ் கரல்டோ பொன்ராசா. — எதிராளி.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழககு நீராவியடி ரோட்டு நாகராசா பரமநாதன். கூட்டு எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில 1929 ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட் டுகசட்டளைப்படி பின்னால் விபரிககப்படும் ஒரு துண்டுக் காணியை 1961 ம் ஆண்டு மார்ச்சு பங்குனி, மாதம் 4 ம் திகதி (4-3-61) சனிக்கிழமை முற்பகல 10 மணிதொடககம் அந்தக காணிக்குள் நின்று பிரசிதத ஏலததில் விற்கப்படும்

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 8325 ம் இதல் ரூபாய் 6000 க்கு 12-1-60 திகதி தொடககம் 13 6-60 திகதிவரைககும 100 கக்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடககம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைககும் 100 ககு 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 289-57½ சதம்,

**காணியின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக தென்மராட்சிப்பகுதி எழுதுமட்டுவாள கோவிற்பற்று மிருசுவிலிறை "செம்பாடு" நிலைப் பரப்பு 15¼-ல் "நுணுவில் செம்பாடு" நிலைப்பரப்பு 14⅝-ம் ஆட்சிப்படி மேலதிகம் நிலைப் பரப்பு 7 3/8-ம் சேர்ந்து நிலைப் பரப்பு 37-ம். எல்லை கிழக்கு எஸ் என். சின்னத்தம்பியின் ஆதனம். வடக்கு சரவணமுததுகார்த்திகேசுவுககும் எஸ் ரீ. நச்சினார்க்கினியர் ஆதனங்கள், மேறகு ஒழுங்கை தெற்கு உசன் ஊரெல்லை ஒழுக்கை இதில் காணியிலும் பிரயோசனங்களி [illegible]

லும் சொரியலாய் அரைவாசியும், கல் வீடும் கிணறும்.

முற்பதிவு F 289/182.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

Commissioner, & Valuer,

[illegible] ed Auctioneer.

தெல்லிப்பழை, 13-1-1961.

M. 174 27-1-61.

## இந்தியாவில் மகாராணியார்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மகாராணியார் மேற்கண்டவாறு கூறினர்.

இந்தியாவின் பல நகரங்களில் ஒப்பற்ற குதூகல வரவேற்பொழுங்குகள் செய்யப்படலாயின.

தெல்லிமாநகரத்தில் நடந்த வரவேற்புபசாரத்தின் பின் மகாராணியாரும்சோமகனும் காந்தியடிகளின் சமாதிக்குச் சென்று மலர் மாலையிட்டு அஞ்சலி செய்தனர்.

அதன் பின் சனதிபதியின் விருந்துபசாரம் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது. சிறந்த பண்டைப் பண்பாட்டை வளர்த்து விஞ்ஞானம் தொழில் நுட்பம் முதலிய துறைகளிலும முன்னேறி உலகுக்கு முன்மாதிரியாய் இந்தியா விளங்குமென்று அத்தருணம மகாராணியார் பேசும் போது குறிப்பிட்டார்கள்.

பேட்டைக்குச் சென்ற பின, சனசமூக முன்னேற்ற வேலைகள், நாட்டு வாழ்க்கை முறை ஆகியவற்றை மகாராணியார் பார்வையிட்டார்.

ஜயிப்பூர் மகாராசாவின் வரவேற்புபசாரமொன்று மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது. பல அன்பளிப்புகளும் கொடுக்கப்படுகின்றன.

—0—

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திந்திக்குந் திருவெம்பாப்பாடல்கள்

## கூட்டம் கூட்டமாய்த் தெருவெங்கும் முழங்கச் செய்யுங்கள்

### சைவமக்கள் யாவரும் இத் திருத்தொண்டில் ஈடுபடுக

"மார்கழித் திங்கள்
மதிநிறைந்த நல்நாளால்
நீராடப் போதுவீர்,
போதுமினோ? நேரிழையீர்.'

என்று ஆரம்பிக்கின்றது ஆண்டாள் அருளிய திருப்பாவை.

"போற்றியாம் மார்கழி
நீராடேலோர் எம்பாவாய்''

என்று முற்றுப்பெறுகின்றது நம் மணிவாசகப்பெருமான் அருளிய திருவெம்பாவை.

மார்கழி நீராடி, மனமொழி மெய்கள் தூய்மை பெற்று மகிழ்வுடன் மகளிர் வாழ்ந்த காலத்தில் எழுந்த அருட்பாடல் வரிகளின் ஒலிப் பதிவே இவை.

3-ம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் வாதவூரடிகள். அவர் தலயாத்திரை செய்து திருவண்ணாமலையை அடைந்த காலம் மார்கழி மாதம். அக்காலத்தில் கன்னிப் பெண்கள் "கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காது" அதிகாலையில் எழுந்து "ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியை"ப் பாடித் துயில்கொள்ளும் தோழியரைத் துயிலெழுப்பி, நீர்நிலையை அடைந்து "பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து. பாய்ந்து சங்கம் சிலம்ப, சிலம்பு கலந்தார்ப்ப, கொங்கைகள் பொங்க, குடையும் புனல் பொங்க, காதார் குழை ஆட, பைம்பூண் கலன் ஆட, கோதை குழல் ஆட, வண்டின் குழாம் ஆட, சீதப் புனல்ஆடிச் சிற்றம்பலம்பாடி" மகிழும் காட்சியை மணிவாசகர் கண்டார் களிகூர்ந்தவகை கொண்டார். 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என எண்ணினார் அழியாதெழுதும் சொல்லோவியங்களாக இருபது அருட்பாடல்களில் அக்காட்சிகளை அப்படியே படம்பிடித்தார். அப்படிப் பிடித்த உயிரோவியத் திருப்பாடல்களே திருக்கும் திருவாசகத்தில் ஒரு பகுதியாக விளங்கும் திருவெம்பாவைப்பாடல்களாகும்.

**திரு. சி. கனகநாயகம்**
**குருதலம் - காரைநகர்**

மற்றைய திருமுறைப் பாடல்களுக்கு இல்லாத தனிச்சிறப்பு இப் பாடல்களில் உண்டு இதை உணர்ந்தே நம ஆன்றோர் மார்கழித் திருவாதிரைக்கு முதலொன்பது நாளும் ஆன்மார்த்தம் பரார்த்தம் என்னும் இரண்டிலும் மற்றைய பாடல்கள் யாவற்றையும் காப்பிட்டு வைத்து இத் திருவெம்பாப் பாடல்களைத் திருப்பித் திருப்பி ஓதி உணரவேண்டுமென்ற மரபொன்றை ஏற்படுத்தி வைத்தனர் "திருவெம்பாவை, சைவத் திருமுறைகளின் சாரம்" என்று ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் திருவாய்மலர்ந்துள்ளதும் அதன் சிறப்பு நோக்கியேயாம்.

இத்துணைத் தனிச்சிறப்புப் பொருந்திய பாடல்களின் கண்ணுக்கினிய கருத்துக்கினிய காட்சிகளைக் கண்கூடாகக் கண்டு களிக்கும்பேறு நமக்குண்டா? ஏதோ ஆன்றோர் ஏற்படுத்திய வழக்கங்கள் நம்மை விட்டு நீங்காது நம்மைப் பற்றியுள்ள காரணத்தால் பொருள் மறைந்த சடங்கு முறையில் நம்மோடு ஒட்டிக்கொண்டிருக்கின்றன.

சமயத்தின் பேரால் வயிற்றுப் பிழைப்பிற்கு வழிதேடும் சிலர், "கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்" என்றும் "கண்ணார் இரவி கதிர் வந்து கார்கரப்பத், தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகல" என்றும் தாம்பாடும் பாடல்களில் வரும் காலக் குறிப்புப் பொருளுணராது பொழுது மறைந்து இரண்டொரு மணி செல்லவே போர்த்துக் கட்டிக்கொண்டு புகையிலைச் சுருட்டுப் புகைத் தூபதீபங்களோடு தெருத் தெருவாய் "உங்கள் படலையிலும் திருவெம்பாப் பாட்டு ஓதினோம்" எனக் கூறிப் பின்னர் பொருள் பெறும் நோக்கோடு அங்கொருபாட்டு இங்கொரு பாட்டாகப் பாடிச்

(தொடர்ச்சி 6 ம் பக்கம்)

## இந்திய சுதந்திரக் கொண்டாட்டம்

### இன்று நாம் செய்ய வேண்டிய கடன்

இன்று, வியாழக்கிழமை (26-1-61) இந்திய சுதந்திர தினம் இந்தியாவில் மாத்திரமன்றி உலகெங்குமே கொண்டாடப்படுகின்றதென்று சொல்லலாம் சுதந்திரத்தை விரும்பாமல் எவருமிருக்க மாட்டார். எந்த நாடுமிருக்க மாட்டாது. அவ்வாறு சுதந்திரத்தை விரும்பி நிற்கும் மக்களுக்கும் நாடுகளுக்கும் வழிகாட்டியாய் உதவுகின்றது இந்தியா.

இந்தியாவுக்குச் சுதந்திரத்தை ஈட்டிய காந்தியடிகள் காட்டிய வாழ்க்கை நெறி அகில உலகத்துக்குமே பொதுவழியாய் அமைந்து நிற்கின்றது, அக்காரணத்தால் இக்கொண்டாட்டத்தில் அகில உலகம் கலந்துகொள்ளுதல் இயல்பேயாம்.

இப்பெருநாளில், ஈழநாட்டு மக்கள் பொதுவாகவும் தமிழ் மக்கள் குறிப்பாகவும் கருத்திற் கொள்ளவேண்டிய சில உண்மைகளுண்டு. அவற்றுள், விடாமுயற்சி அறவாழ்க்கை, கடவுள் நம்பிக்கை என்பன முதலிடம் பெறுகின்றன. அறவாழ்க்கையையும் கடவுள் நம்பிக்கையையும் இடைவிடாது வலியுறுத்தி வந்துள்ளார் காந்தியடிகள். அவை சுதந்திரம் பெறுதற்குத் திடமான வழிகளாகும். ஆகையினாலே, நாம் பெறுவதன்றி சுதந்திரம் பிறர்தருவதொன்றன்றென்னும் காந்தியடிகளின் கருத்துப்படி தெய்வ நம்பிக்கையுடன் அறநெறியில் நின்று சுதந்திரமடைய விடாமுயற்சி செய்தல் எம்மவர் மீது இன்று அமையும் கடனாகின்றது.

### தேகவியோகம்

வட்டுக்கோட்டை வாசரும், மலாய் நாட்டுக்கு 1887-ம் ஆண்டிற் சென்று ஆங்கில அரசாங்கத்தில் அளப்பனவுகாரராய் உத்தியோகம் வகித்த, மலாய் நாட்டில் ஈழநாட்டு மக்களுக்கு உத்தியோகம் பெற உதவுதல் முதலிய பல தொண்டுகளோடு சைவக்கல்விக்குப் பேருதவி புரிந்து வந்தவருமாகிய திரு. ஆர். ஏ. நாகநாதரின் பிரிய பத்தினியார் ஸ்ரீமதி. சொர்ணம்மா அவர்கள் சிங்கப்பூர் பயாலபார் 13-ம் இலக்க வீடாகிய தமது இல்லத்தில் சென்ற திங்கட்கிழமை (23-1-61) இவ்வுலக வாழ்வை நீத்தார் என்னும் செய்தியை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

தமது கணவன் செய்து வந்த அருந்தொண்டுகளுக்குப் பேருதவியாய் வாழ்ந்த அம்மையார் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தலைமையாசிரியராயிருந்து காலஞ்சென்ற திரு. மூ. சபாரத்தினசிங்கமவர்களின் சகோதரிகளுள் ஒருவரும், சிங்கப்பூர் அரசாங்க நிதிநிலையப் பொருளாளராயிருந்து இளைப்பாறிய திரு. ஐ இராசா அவர்களின் மாமியாருமாவர்.

இறைவன் திருவருளால் அம்மையார் ஆன்மசாந்தியடைவாராக.

வெளிவந்துவிட்டது
யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பிரசுரம்
**பாலபாடம்**
**ஏழாம் புத்தகம்**
—அதிபர்,
சைவப்பிரகாச யந்திரசாலை.

## அணிந்துரை அரங்கம்

**வாய்மொழி இலக்கியம்**
(நாட்டுப்பாடல்கள்)

யாழ்ப்பாணப் பிரதேசக் கலை மன்றம், நாட்டுப்பாடல் நடன நாடகக்குழு வெளியீடு.

பிரதி விலை. ரூபா: 1/-
பெறுமிடம்:
(1) திரு சி. வேலுப்பிள்ளை கச்சேரி யாழ்ப்பாணம்.
(2) இந்துசாதனக் காரியாலயம் வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம்.
(3) முகாந்திரம் திரு. இ. பொ. இராசையா கடை 195, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பிரதேசக் கலை மன்ற நாட்டுப்பாடல் நடனக்குழுவின் முதல் வெளியீடாகிய இது அரசாங்க அதிபர் திரு. ம ஸ்ரீகாந்தா அவர்களின் ஆசியுரை பெற்று "கண்டேரா கண்மணியை" என்பது முதலாய் இருபத்து மூன்று வகைப் பாடல்களைத் தன்னகத்தே தாங்கி நிற்கின்றது. "சொல்வளம், பொருள்வளம் உணர்ச்சி நிறைவு சிறந்து விளங்கும் நாட்டுப் பாடல்களும், நாட்டுக்கூத்துகளும் எமது மூதாதையர் எமக்களித்துச் சென்ற பழந்தமிழ்ச் செல்வங்கள்" என்ற ஆசியுரையின்படி, எங்கள் முன்னோரின் பண்பாட்டைச் சொல்லோவியத்தாற் சித்திரித்துக் காண்பிக்கும் இதை எல்லவர் விரும்பி வரவேற்பரென நம்புகின்றோம்.

## விழிப்புங்கள் எழுங்கள் சலியாது உழையுங்கள்

### இனக்கொலையைத் தடுக்க முன்வருமாறு தமிழரசுக்கட்சித் தலைவரின் விழிப்புரை

"இன்றைய பிரச்சினை மொழியைப்பற்றியதோ, உத்தியோகங்களைப்பற்றியதோ அன்று. உங்கள் தாய்மொழிக்குப் பேராபத்து ஏற்பட்டிருப்பது உண்மை. உங்கள் உத்தியோகங்களுக்கு, ஊதியந் தேடும் மார்க்கங்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதும் உண்மையே. ஆனால், இவற்றோடு நீங்கள் தமிழராக வாழும் உரிமைக்கு, பன்னெடுங்காலமாக எமது முன்னோர் கட்டிக்காத்துக் கையளித்த பாரம்பரியத்துக்கு ஐயாயிரம் ஆண்டுகளாகப் பேணி வளர்த்த எம் தனிப்பெரும் பண்பாட்டுக்கே பேராபத்து வந்திருக்கிறது. உங்களுக்கு அரசியல் சுதந்திரம் இருந்தாலன்றி இவைகளைக் காக்க முடியாது. இந்த ஆபத்தை இன்றே இப்போதே தடுத்து நிறுத்த வேண்டும் தவறுவீர்களானால், வருங்காலச் சந்ததியினரின் சாபத்திற்கு ஆளாவீர்கள்".

யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழரசுக்கட்சியின் ஏழாவது மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசும்போது திரு எஸ். எம். இராசமாணிக்கமவர்கள் மேற்கண்டவாறு கூறினார்கள்.

"1946 "டிசம்பர்" 11-ந் தேதி ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பொதுச்சபை தனது 96-வது தீர்மானத்தின் முதற்பகுதியில் கீழ்க்கண்டவாறு பிரகடனப் படுத்தியிருக்கிறது.

"தனி மனிதன் வாழும் உரிமையை மறுப்பதைக் கொலையென்று கூறுவதைப்போல், ஒரு மனித சமூகம் முழுவதற்கும் வாழும் உரிமையை மறுப்பது இனக்கொலையாகும். மானிட சமுதாயத்தின் மனச்சாட்சியையே கலக்குகின்ற இவ்வினக்கொலை அச்சமூகங்கள் மனித சமுதாயத்திற்கு அளிக்கும் கலாசார வளர்ச்சிகளை இழக்கச் செய்வதோடு தார்மீக நெறிக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கத்திற்கும் மாறானதாகும்.

1958 "டிசம்பர்" 9-ம் தேதி ஐ. நா. பொதுச்சபையின் இனக்கொலைபற்றிய மகாநாட்டில் கீழ்க்கண்ட விஷயங்கள் இனக்கொலையாகக் கருதப்படும் எனத் தீர்மானிக்கப்பெற்றது'; ஒருசமூகத்தைச் சேர்ந்தவர்களைக் கொல்லுதல், ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்களின் உடலுக்கு அல்லது உள்ளத்திற்குப் பாரதூரமான ஊனம் விளைவித்தல், ஒரு சமூகத்தை முழுமையாகவோ, ஒரு பகுதியாகவோ, அழிக்கக்கூடிய வாழ்க்கைச் சூழ்நிலையைத் திட்டமிட்டு ஏற்படுத்துதல், ஒரு சமூகத்தில் குழந்தைகள் பிறப்பதைத் தடுக்கும் திட்டங்களை அமுல் நடத்துதல், ஒரு சமூகத்தின் குழந்தைகளை [illegible] கையளித்தல்" என்று மேலும் பேசும்போது

எடுத்துக்காட்டி இரண்டு வாரங்களுக்கு முன் எமது நடவடிக்கைக்குழு விடுத்த அறிக்கையை நீங்கள் அறிவீர்கள். அதிற் கூறப்பட்ட செயல் திட்டத்தை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். சுதந்திரத்துக்குக் குறுக்குவழி இடையாது. வீரத்தோடு கட்டுப்பாட்டோடு, சத்தியம் எமது பக்கம் இருக்கிறதென்ற நம்பிக்கையோடு, விடுதலை பெற்றே தீருவோம் என்ற திடசித்தத்தோடு, எமது இலக்கை நாம் நிச்சயம் சென்றடைவோம். சுவாமி விவேகானந்தரின் சொற்களில் உங்களை அழைக்கிறேன். விழியுங்கள் — எழுங்கள், இலக்கை அடையுமட்டும் சலியாது உழையுங்கள் என்று மேலும் பேசும்போது தமிழ் மக்கள் யாவரையும் வேண்டிக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தித்திக்கும் திருவெம்பாப் பாடல்கள்

5-ம் பக்கத் தொடர்ச்சி


செல்லும் காட்சியையும், இந்தக் குளிரிலே குளித்து முழுகிக் கோயிலுக்குப் போக ஆரால் முடியும், இந்த (தலை மாட்டருகில்) வானொலிப் பெட்டியிலேயே திருவெம்பாப் பாட்டெல்லாம் கேட்கலாமே" என்று சொல்லி வானொலிப் பெட்டியை எட்டித்திறந்துவிட்டுப் போர்வையால் தம்முழு உடலையும் இறுக்கி மூடிப் போர்த்துக் கொண்டு கனாக்காணும் கலியுக பக்தகோடிகளின் காட்சியையும், திருவெம்பாத் திருவிழா என்ற பேரில் நேரத்தைப்போக்கி உச்சிப்பொழுது ஆனபின்பும் ஒரு பாட்டும் ஓதிமுடியாத் திருக்கோவில் நிகழ்ச்சிகளையும் நினைத்துப் பார்த்து நிலை தவறி நிற்கும் நம் தமிழர்களின் நிலையை உணர்ந்தால் யாருக்குத்தான் நெஞ்சு குமுறிக் குலையாது.

இக்குமுறலைக் குணப்படுத்தவும், பாட்டிலுள்ள காட்சிகளை ஒவ்வொரு வீட்டிலும் நாட்டிலும் மீண்டும் உயிர்ப்பித்து - ஆன்றோர் அருள்நெறி மரபுகளைப் பேணி வளர்த்துப் பிற்சந்ததியார் உள்ளங்களில் ஊன்றி - அன்பு மலரும் அருட்கனியும் கனிந்து அகில உலகத்தாரும் அந்து மகிழ்ந்து ஒன்றுபட்டு ஒரு குலமாய் உலகப் புகழோடு வாழ்வாங்கு வாழ்ந்து வளர வேண்டுமென்ற விருப்பால் "காரை நகர்க் குருகுல 'பசுவை'க் குழுவினர் ஞான விநாயகன் திருவருளை முன்னிட்டுச் சென்ற ஆண்டிலோர் இயக்கத்தை ஆரம்பித்தனர். அவ்வியக்கம் இவ்வாண்டும் சிறந்த பணியாற்றத் திருவருள் கூட்டிவைத்தது.

குருகுலத்தில் தங்கும் மாணவ மாணவிகள் மார்கழி பிறந்தால் 4 மணிக்குத் துயிலெழுவர். பேரொளி வீசும் "பெற்றோமக்ஸை" (Petromax) ஏற்றுவர். பேரருட் சோதியாம் இறைவனைப் புகழ்ந்து போற்றுவர். மணியோசையைக் கணீர் கணீரென ஒலிப்பர். விருப்போடு வெண் சங்குகளை ஊதுவர் வீதிவழி செல்வர். வீடுகளில் நுழைவர். தோழர் தோழியரை அழைப்பர். ஆடவர் ஐம்பதாய் அரிவையர் ஐம்பதாய்ச் சேர்வர் அணிவகுத்து அருட்பாடல் பாடிச் செல்வர். அகன்று பரந்த திருக்குளத்தை அடைவர். ஆசைதீரப் பாய்ந்து, பாய்ந்து, குடைந்து, நீராடி மகிழ்வர். மார்கழி பிறந்தால் முற்றமெழுகி முத்தன்ன வெண் மாவால் கோலமிட்டு முன்னவனும் விநாயகனை முன்னிறுத்தி வணங்குவது முன்னோர் வழக்கல்லவா? இவ்வழக்கம் வழுவுண்டு வந்தாலும் முன்னவனை வணங்கப் பின்னிற்காது அருகிலுள்ள ஆனைமுகன் ஆலயத்துட் செல்வர் "ஆத்தி சூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே" "கொன்றை வேந்தன் செல்வன் இணையடி என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே" என்ற இனதமிழ்ப் பாடல்களை இசையோடு பாடுவர். விநாயகனை வலம்வருவர் திருப்பள்ளியெழுச்சி பாடுவர் பூசையைக்கண்டு பூரிப்பர் பூசகரைப் போற்றிப் பிரசாதம் பெறுவர். பெற்றதும் வீடு செல்லார்- அமைதியாய் வரிசையில் நிமிர்ந்து அமர்வர். "ஐந்து கரத்தனை" என்ற பாடலைக் கசிந்து பாடிக் கருத்தொருமித்துத் தியானம் பயில்வர். வேண்டும் வரங்களை விண்ணப்பிப்பர், ஆசிரியரின் சமய விளக்க உரைகளை விரும்பிக்கேட்பர். இறுதியில் இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க! "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற வாழ்த்துரைகளை முழங்கித் தத்தம் வீடு செல்வர். மார்கழி 30 நாளும் மாணவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சிதான். ஒழுங்காய் வந்த ஒவ்வொருவருடைய வரவும் பதியப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். இக்காட்சிகளைக் கண்டு களிக்கும் பாக்கியம் எல்லாக்கிராம மக்களுக்கும் கிட்டும் நாள் என்நாளோ?

சைவ சமயாபிமானிகளே! சிந்தித்துப்பாருங்கள். நாம் மது சைவரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றா? நம் சமயக்கருத்துக்கள் நம் வாழ்வில் விளங்க வேண்டாமா? திருவெம்பாப்பாடல்களைத் திருப்பித் திருப்பி, திருக்கோயில்களில் ஓதினால் மட்டும் போதாது. சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் திருமுழக்கம் செழிக்க வேண்டும். பாட்டில் உள்ள காட்சிகளை மீண்டும் நம் வீட்டிலும் நாட்டிலும் விளங்கச் செய்ய வேண்டும். வெறும் வாய் வேதாந்தத்தோடு நாம் நின்றமையால்தானே இன்று எத்தனையோ இளைஞர்கள் — வாழ்க்கைவானில் வளர்மதிகளென விளங்கும் வருங்காலச் செல்வங்கள் — கரும்பிருக்க இரும்பு கடித்து இளைத்தலுக்கு விரும்புபவர் போல் சமய நம்பிக்கையிழந்து நாத்திகம் பேசி நன்னெறி நீங்கிப் புன்னெறி புகுகின்றனர். "எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே!" என்ற ஒளவையார் வாக்கை நாட்டுப்பற்றும் சமயப்பற்றும் உள்ள ஒவ்வொருவரும் சிந்தித்துணர்ந்து செயலாற்றப் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர். இதுபோன்ற அருட்பணிகளை ஒவ்வொரு கிராமத்திலுள்ள அன்பர்களும் ஆரம்பித்து அருளொளி பரப்பி அமைதியையும் இன்பத்தையும் நிலைநாட்ட முயல்வார்களாக.

குறிப்பு:- படுக்கைச் சுகத்தை விட்டும், பனிக்குளிர்க் கொடுமையைப் பொறுத்தும் பல பச்சிளங்குழந்தைகள் பாடும் பணியிலும் - பாய்ந்து நீராடும் பணியிலும் பங்குபற்றினார். அவர்களை மேலும் ஊக்கும் பொருட்டுப் பரிசளிப்பு வைபவம் ஒன்று நடைபெற இருக்கின்றது. பரிசளிப்பிற்குப் பொருளுதவி செய்ய விரும்பும் அன்பர்கள், ஆசிரியர், குருகுலம் காரைநகர் என்ற முகவரிக்குக் கூடிய விரைவில் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கவும்.




COMMISSION SALE

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திரிக்கோர்ட்டு வழக்கு

இலக்கம். 6610.

உடுப்பிட்டி கணபதிப்பிள்ளை கைம்பெண் பாறுவதி அம்மாள்
—வழக்காளி.

எதிராக

1. உடுப்பிட்டி ஐயா அம்பலமும்
2. பெண் அன்னப்பிள்ளை
—எதிரிகள்.

மேற்கூறிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்கு கோர்ட்டால் அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் 1961-ம் ஆண்டு மாசி மாசம் 18-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் பின்னால் விபரிக்கப்படும் ஆதனமிடமாக நின்று என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக்கோயிற்பற்று உடுப்பிட்டி யிறை செம்பாடு நிலப்பரப்பு 27/8 எல்லை கிழக்கும் தெற்கும் வல்லிபுரம் இராமலிங்கத்திற்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்கு கணபதியார் சின்னத்தம்பிக்குடைய வாதனம், மேற்கு அமெரிக்கன் மிசனுக்குடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் வேப்பு அடங்கலில் சொரியலாய் அரைவாசி. தீர்வைததொகை:- ரூ 2096-96

V M. KANDASAMY
Commissioner of sales

வல்வெட்டித்துறை,
17-1-61
M. 175, 27-1.61.



அடைவு நகை
ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு க. செ. செ. செல்லையா பிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1-4-58 முதல் 31-3-59 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 1961 ஆ பெப்ரவரி மீ 21 உ (21-2-61) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து மீட்கப்பட்ட நகைகள் பிறகிங்கலாக ஷெ கடையில் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

C. Ragunathan,
வெந்தீஸ் மேஸ்தர்,
யாழ்ப்பாணம்,
21-1-61.
M 173 27-1-61.


## மொழிப் பிரச்சினையில் ஆசிரியர்களின் முயற்சி

இந் நாட்டில் நிலவிவரும் மொழிப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிங்கள தமிழ் ஆசிரிய சங்கங்கள் முயற்சிக்கின்றன என்று அறியவருகின்றது, தமிழ் ஆசிரிய சங்கச்சார்பில் திரு கு. வி. செல்வத்துரை, திரு.எப் சிவநேசராசா முதலியோரும், சிங்கள ஆசிரிய சங்கச்சார்பில் ஸ்ரீ பீற்றர் சில்வா, ஸ்ரீ. எல். ஜீ மேத்தானந்த முதலியோரும் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்களென்றும், சிங்கள மக்களுக்குச் சிங்களம் எவ்வாறு அமைகின்றதோ அவ்வாறு தமிழ் மக்களுக்குத் தமிழ் மொழி ஆதல் வேண்டுமென்னும் கருத்தைச் சிங்கள ஆசிரியர்கள் ஆதரிக்கிறார்களென்றும் இத்தொடர்பிற் கூறப்படுகின்றது.

## உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 29-1-61—4-2-61

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

கமத் தொழில முயற்சிகள் மூலம் இலாபங்கள் இந்தவாரம் நிச்சயம். ஆனால் உமது மனம் அமைதியாயிருக்க மாட்டாது. வேலை கூடுதலாயிருக்கும், வார இறுதியில் அவமானங்களும் உண்டாகக்கூடும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

நண்பர்கள் இனத்தவர்களுடன் சண்டைகள் பிழை எண்ணங்களுக்கிடமுண்டு ஆனால் "பிப்பிரவரி" முதலாந் திகதியின் பின் நெருக்கடி குறையும். எதிரில் நல்ல காலம்.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

உமக்கு மனச்சமாதானமிருக்க மாட்டாது. பெரும் பொறுப்புகளை நீர் மேற்கொள்ள வேண்டி வரும். தேக சுகமும் அதிகம திருத்தியாயிருக்கமாட்டாது. எந்த ஒரு தீர்மானத்தையும விரைந்து செய்ய வேண்டாம.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம ஆயிலியம்.

குடும்பக் கருமங்கள் இந்த வாரம் குழப்பமாயிருக்கும். 'பிப்பிரவரி' முதலாந் திகதியின் பின் உமமுடைய கருமங்களில் நீர் சில எதிர்ப்புக்களை முன்னிட வேண்டி வரும். ஆனால் பணத்துறையில ஒரு அளவுக்கு நலல வாரம.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம 1-ம் பாதம்.

தேகசுகம் சிக்கலா யிருக்கும். ஆனால் உத்தியோகத் துறையில் நல்ல வாரம எதிர்ப்பிருந்தபோதிலும் கருமங்களை நீர் விருமபுகிறபடி கையாளலாம். பகைவர் அழிவுக்கிடமுண்டு.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உமக்கு மனச்சமாதானமிருக்க மாட்டாது, புதுமுயற்சிகள் தாமதிக்கப்படும். ஆனால் சித்தியாகும். சிறிது காலத்துக்குத் தேகசுகம் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**துலாம்**, சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

உம்முடைய சொந்தச் சிக்கல்கள் சில விரைவில் நீக்கப்படும் பணத்துறையிலும் நல்ல வாரம். ஆனால் இனத்தவர்களுடன் சில சண்டைகளிருக்கும், அன்னியரும் அறியாதவர்களும் அதிக உதவியாயிருப்பார்கள்,

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணத்துறையில் நல்ல வாரம். கமததொழில் முயற்சிகள் நல்ல பலனைத்தரும். புது முயற்சிகள் தாமதிக்கப்படும். ஆனால் சித்தியாகும், உம்முடைய சிக்கல்கள் சில 'பிப்ரவரி" முதலாந்திகதியிலிருந்து நீக்கப்படும். ஆனால் வாரத்தின் முதல் நாளைக் கவனமாய்க் கழிக்கவும், திங்கள் காலையும் சமாதானமுள்ளதாயிருக்க மாட்டாது.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

முன் அரை வாரம் விசேடமாய் திங்கள் செவ்வாய் புதன் [illegible] இடையின் பின் நெருக்கடி குறை [illegible]

**மகாராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

உமது மனம் அமைதியாயிருக்க மாட்டாது தேக சுகமும் பாதிக்கப்படக்கூடும். வியாழம வெள்ளியும் சனி காலையும் கவனமாய்க் கழிக்கவும். மேலதிகாரிகளுடன் முரண்பாடுகளைத் தவிர்க்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

குடும்பக்கருமங்களும் உத்தியோக கருமங்களும் குழப்பமாயிருக்கும், ஈற்றில் நீர் விரும்புகிறபடி செய்யலாமேயெனினும் நீர் அதிக எதிர்ப்பையும் கண்டனத்தையும் முன்னிட வேண்டி வரும். சனிக்கிழமையைக் கவனமாய்க் கழிக்கவும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

நல்ல காலத்துக்குச் சில அறிகுறிகளிருக்கு உம்முடைய முயற்சிகள் பலவற்றில் நீர் சித்தியடையக்கூடியதாயிருக்கும். புகழும் [illegible]


சங்கானை
அரசடி வயிரவர் கோவில்
தேர்த்திருப்பணி
விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

சங்காவை அரசடியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் வயிரவப்பெருமானுக்குத் தேர்த் திருப்பணி ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இத் திருப்பணியைப் பூர்த்தி செய்யத் திரவியம் வேண்டி இருப்பதால் சிவநேயச் செல்வர்களை உதவி செய்யும் வண்ணம் வேண்டுகிறோம். பணம் பெறுபவரிடம் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பணம் அனுப்புபவர்கள் கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்,
பொ. அப்பாத்துரைஐயர்.
அரசடி வயிரவர்கோவில்,
சங்கானை,
F 191 19-9-60.


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 27-1-1961 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org